பக்கங்கள்:-17

காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 14 | செவ்வாய்க்கிழமை | 27.02.2024 | அதிர்வு 210 |
|---|---|---|---|---|---|

## கைத்துப்பாக்கியுடன் யுவதி ஒருவர் கைது!

இயங்கும் நிலையில் உள்ள கைத்துப் பாக்கியுடன் 22 வயது யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி, இக்கடுவை பிரதேசத்தில் மேற்படி யுவதி நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தில் பணியாற்றிய 06



# தமக்கு எதிரான பிரேரணை தோற்கடிக்கப்பட்டே தீருமாம்

## இப்படி சூளுரைக்கின்றார் சபாநாயகர்

"நாடாளுமன்றத்தில் எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அது நீதியின் பக்கம் நிற்கும் எம்.பிக்களால் தோற்கடிக்கப்பட்டே தீரும்."

- இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். 06

## புதிய பொலிஸ்மா அதிபராக தென்னக்கோன் நியமனம்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அதிபர் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து டி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோன் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 41ஆ.(1) மற்றும் 61ஈ(ஆ) ஏற்பாடுகளின் பிரகாரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் நேற்றுப் பிற்பகல் தேசபந்து தென்னக்கோனிடம் நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.



## யாழில் விசர் நாய் கடித்து இளைஞர் பரிதாபச் சாவு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஆவரங்கால் பகுதியில் விசர் நாய் கடித்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த பிரதாபன் ஷாலமன் என்ற 23 வயதான இளைஞரே உயிரிழந்தார்.

சில தினங்களுக்கு முன்னர் நாய் கடித்து இயலாமைக்குள்ளான மேற்படி 06




தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலின் நாடகத்தில் சபாநாயகரின் செயற்பாடு குறித்து இன்று எட்டாம் பக்கத்தில் நமது கருத்து என்ற ஆசிரியர் தலையங்கப் பகுதியில் விலாவாரியாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை வழங்கும் அரசமைப்பு கவுன்ஸில் நாடகம் நேற்று நடத்தி முடிக்கப்பட்டமைக்கு ஒரு 06

# ஸ்ரீலங்கன் விமானங்கள் தாமதமாகியமைக்கு தொழிற்சங்கங்கள் பொறுப்புக்கூற வேண்டும்

## அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவிப்பு



ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை முறையாக நடத்திச் செல்ல முடியாது என்றால் அதனை மூடிவிட வேண்டிய நிலை ஏற்படும். நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் தொழிற்சங்கங்களின் பலவீனம் காரணமாகவே விமான சேவை தாமதமானது."

– இவ்வாறு துறைமுகங்கள். கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த சனிக் கிழமை ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விமான சேவை குறிப்பிட்ட நேரத்துக்குப் பயணிக்க முடியாமல் தாமத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக விமான நிலையத்துக்கு வந்திருந்த பயணிகள் அங்கு ஆத்திரமடைந்ததால் அமைதியின்மை நிலையும் ஏற்பட்டிருந்தது.

விமானம் ஒன்று ஏதாவது ஒரு காரணத்தினால் கோளாறு ஏற்பட்டு, அதனை இயக்க முடியாத நிலை ஏற்பட்டால் அதற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது, அந்த நிறுவனத்தின் முகாமையாளர்களின் கடமையாகும். ஆனால் தொழிற்சங்கங்களும் முகாமையாளர்களும் அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் பயணிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி, ஸ்ரீலங்கன் விமான சேவையின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

அதனால், ஸ்ரீலங்கன் விமான சேவையை முறையாகக் கொண்டுசெல்ல முடியாது என்றால் அதனை மூடிவிடவேண்டி ஏற்படும். ஏனெனில் இவ்வாறான நடவடிக்கை காரணமாக இந்த விமான சேவையை தனியார் மயமாக்க பல நடவடிக்கைகள் எடுத்தபோதும் அதற்கு யாரும் முன்வருவதில்லை. ஸ்ரீலங்கன் விமான சேவையின் பொறியியலாளர் துறை மற்றும் விமானிகள் கடந்த காலத்தில் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக இந்த நிறுவனத்துக்கு இருந்த வரவேற்பு தற்போது முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை இலவசமாக வழங்கினாலும் அதனை பொறுப்பேற்க யாரும் முன்வருவதில்லை.

என்றாலும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தைத் தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்வதன் மூலமே இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும். அவ்வாறு இல்லாமல் தொழிற்சங்கங்கள் காலத்துக்கு காலம் பல்வேறு காரணங்களை தெரிவித்துக்கொண்டு, முறையான விமான சேவையை மேற்கொள்ளாது, அதிகமான சலுகைகளை அனுபவித்து வருகின்றனர். அதனால் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் தற்போதைய நிலைமைக்கு தொழிற்சங்கங்களும் அதன் முகாமையாளர்களுமே பொறுப்புக்கூற வேண்டும்.

அதேநேரம் விமான நிலையங்களை பெற்றுக்கொள்ள இந்தியாவின் அதானி நிறுவனம், சீன, ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் எதிர்பார்த்து இருக்கின்றன. ஆனால் எமது விமான நிலையங்களை வெளிநாடுகளுக்கு வழங்க நாங்கள் தயாரில்லை."– என்றார்.



# 138,736 சுற்றுலாப் பயணிகள் 18 நாள்களில் நாட்டுக்கு வருகை

இந்த மாதத்தின் முதல் 18 நாள்களில் மாத்திரம் 138,736 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்தக் காலப்பகுதியில் ரஷ்யாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து 20 ஆயிரத்து 101 பேரும், இந்தியாவில் இருந்து 18 ஆயிரத்து 564 பேரும், சீனாவில் இருந்து 10 ஆயிரத்து 696 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 2 லட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# வெப்பத் தாக்கத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாக்க கல்வி அமைச்சு புதிய ஆலோசனை வழிகாட்டுதல்கள்

அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக மாணவர்களுக்கான தாக்கத்தை குறைக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் புதிய ஆலோசனை வழிகாட்டுதல்கள்வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய, கல்வி அமைச்சு மேற்படி வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, அதிக வெப்பநிலை நிலவும் நாள்களில் விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதைத் தவிர்க்குமாறும்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நாள்களில் அவசியமான அலுவல்கள் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளுக்காக மாணவர்களை வீடுகளிலிருந்து அல்லது பாடசாலையிலிருந்து வெளியே அனுப்புவதைத் தவிர்க்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், அதிக வெப்பநிலை நாள்களில் இல்ல விளையாட்டு போட்டிகள் மற்றும் பயிற்சிகளை நடத்துவதைத் தவிர்க்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, மாணவர்களை அதிகளவில் நீர் அருந்தச் செய்யுமாறும், அவர்கள் ஓய்வெடுப்பதற்காக குறைந்தபட்சம் இரண்டு குறுகிய நேர இடைவேளைகளை வழங்குவது பொருத்தமானதாகும் எனவும் கல்வி அமைச்சின் வழிகாட்டுதல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் கழுத்துப்பட்டி அணிவதை தவிர்க்க முடியும் என்பதுடன், தகரங்களினால் அமைந்த கட்டடங்களில் இருந்து தற்காலிகமாக மாணவர்களை ஏனைய பொருத்தமான கட்டடங்களுக்கும் அனுமதித்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து வலய கல்வி பணிப்பாளர்களின் ஊடாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இலங்கையின் கடல் எல்லையில் கறுப்புக்கொடி போராட்ட முஸ்தீபு


இலங்கைக் கடல் எல்லையில் எதிர்வரும் 03ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) கறுப்புக்கொடி போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன என யாழ்.மாவட்ட கடற்றொழில் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

நேற்றையதினம் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நாம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளோம்.

இதனைம் தடுத்து நிறுத்துமாறு தொடர்ச்சியான கோரிக்கையை நாங்கள் முன்வைத்து வந்தமையுடன் பல்வேறு போராட்டங்களையும் நடாத்தியுள்ளோம்.

ஆனாலும் உரிய தீர்வு கிடைக்காத நிலையே உள்ளது. இந் நிலையில் எமக்கான தீர்வை வலியுறுத்தி தொடர் போராட்டங்களையே முன்னுடுக்க தீர்மானித்துள்ளோம். – என்று அவர்கள் தெரிவித்தனர்.



# பிரி. தூதருடன் ரெலோ சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கொழும்பில் நடைபெற்றது.

பிரித்தானிய சார்பில் இலங்கைக்கான புதிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் மற்றும் சமாதானம் மற்றும் மனித உரிமைக்கான செயலாளர் ஹென்றி டொநாட்டி ஆகியோரும் ரெலோ சார்பில் கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., உப தலைவர் ஹென்றி மகேந்திரன் மற்றும் கட்சியின் தேசிய அமைப் பாளரும் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஏறத்தாழ 45 நிமிடங்கள் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதானமாக ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமை பேரவையினுடைய கூட்டம், தமிழர்களுக்கான நீதியை பெறுவதற்கான பிரித்தானியாவினுடைய பங்கு என்பன தற்கால அரசியல் விடயங்களோடு பேசப்பட்டன. மனித உரிமை பேரவையின் அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் இச் சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.



# ருமேனியாவுடன் இரட்டை வரி விதிப்பை தவிர்க்கும் உடன்பாட்டில் கைச்சாத்து!

இலங்கைக்கும் ருமேனியாவுக்கும் இடையில், இரட்டை வரி விதிப்பைத் தவிர்ப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும், ருமேனிய தூதுவர் டொமினா ஸ்டெலு சாவுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், இருநாடுகளுக்கும் இடையில் கல்வி, விவசாயம், தொடருந்து மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய துறைகளிலும் ஒத்துழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# களனிப் பல்கலைக்கழகத்தின் மாணவ செயற்பாட்டாளர் கைது

களனிப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவ செயற்பாட்டாளரான சஞ்ஜய ஹெட்டிமுல்ல குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பகிடிவதை சம்பவங்கள் மற்றும் மாணவர்களை தடுத்து வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு சென்ற சந்தர்ப்பத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அரச அலுவலர்களினுடையவை என அறிவிக்கப்பட்ட 49 வீதமான தொலைபேசி எண்கள் செயல்படாதவை

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வில் கண்டுபிடிப்பு

(கனகராசா சரவணன் )

இலங்கையில் அரச உத்தியோகத்தர்களின் 49 வீதமான தொலைபேசி எண்கள், அதாவது அரைவாசி எண்கள் செயல்படாத எண்கள் எனப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரக் கற்கைகள் பிரிவின் கணக்கெடுப்பொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரவியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரலவினால் நாடு முழுவதையும் உள்ளடக்கிய இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினுடையவை என்று பிரதேச செயலகத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களைக் கருத்தில் கொண்டு இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கணக்கெடுக்கப்பட்ட 589 தொலைபேசி எண்களில் 286, அதாவது 49 வீதமானவை செயலற்ற எண்கள் எனவும் தொலைபேசி எண்களில் 22 வீதம் செயலில் உள்ளன, ஆனால் பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆய்வுத் துறையின் கூற்றுப்படி, அழைப்புகளுக்கு பதிலளிக்கும் சதவீதம் 29 ஆகும்.



மேலும், 98 உள்ளூராட்சி மன்றங்கள், 23 மாநகர சபைகள் மற்றும் 36 நகர சபைகளின் தொலைபேசி இலக்கங்கள் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எனவே அரச சேவையில் தற்போதுள்ள வினைத்திறன் இன்மை குறித்து கணக்கெடுப்பின் முடிவுகள் மூலம் புரிந்து கொள்ள முடியும் என பேராதனை பலகலைக் கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரக் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல சுட்டிக்காட்டியுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காரணம் உண்டு.

தேசபந்து தென்னக்கோன் நேற்று வரை பதில் பொலிஸ்மா அதிபர் பதவியிலேயே இருந்தார். அந்தப் பதவியில் அவரை நியமித்தமையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட இருக்கையில், அதனால் விபரீதம் ஏதும் நேரும் முன்னர், அவருக்கு அந்தப் பதவியை முழுமையாக வழங்கி, அதனை உறுதிப்படுத்துவதற்காகவே அரசமைப்புக் கவுன்ஸிலை நேற்றுக் கூட்டி, அந்த நாடகத்தை அரங்கேற்றினர் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

உயர்நீதிமன்றம் என்றதும் ஒரு விடயம் நினைவுக்கு வருகின்றது.

உயர்நீதிமன்றத்தின் முக்கிய நீதியரசர் ஒருவர் வரும் முதலாம் திகதி வெள்ளியன்று ஓய்வு பெறுகின்றார். அவர் விசாரித்து முடித்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய பல வழக்குகள் நிலுவையில் நிற்கின்றன. அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் அந்த வழக்குகளின் தீர்ப்புகளை அவர் வழங்காவிட்டால் அந்த வழக்குகள் எல்லாம் மீண்டும் திரும்பவும் வேறு நீதியரசர்கள் ஆயத்தின் முன்னால் ஆரம்பத்தில் இருந்து விசாரணை செய்ய வேண்டி நேரும் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நிகழ்நிலைக் காப்புச் சட்ட விவகாரத்தில் சபாநாயகரின் நடத்தையை ஒட்டி அவருக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்ற விடயத்தை விசாரித்து தீர்ப்பை ஒத்திவைத்த நீதியரசர் இவர்தான். ஓய்வு பெற முன்னர் அந்த வழக்கு விவகாரத்தில் தமது முடிவை அறிவித்து விட்டு அவர் செல்வாரா அல்லது அவர் ஓய்வு பெற்ற பின்னர், புதிய நீதியரசர் ஒருவரை ஆயத்தில் சேர்த்து, மீண்டும் ஆரம்பத்தில் இருந்து வழக்கைப் புதிதாக விசாரணை செய்வதா என்பது தெரியவில்லை.

ரிஷாத் பதியுதீனின் இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து முஷாரப் எம்.பி. வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முழுதாக விசாரித்த பிரதான நீதியரசர் அவர்தான். இத்தகைய வழக்குகளில் இரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது சட்ட ஏற்பாடு. சுமார் ஒருவருடம் தாண்டியும் தீர்ப்பை நீதியரசர் இன்னும் வழங்கவில்லை. ரிஷாத் பதியுதீனின் கட்சி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையாகி வாதாடியிருந்தார். விசாரணை நடந்து ஒரு வருடம் தாண்டியும் தீர்ப்பை வழங்காத நீதியரசர், இப்போது அம்போ என்று விடயத்தை அப்படியே போட்டு விட்டுச் சேவையிலிருந்து கையை வீசியபடி, ஓய்வு பெற்றுச் சென்றால் வழக்கை முதலாவது அடியிலிருந்து திரும்பவும் ஆரம்பித்துத் தொடர்ந்து நடத்த வேண்டியிருக்கும்.

இந்த வழக்கு விசாரணை முடிந்த பின்னர்தான், அமைச்சர் நஸீர் அகமட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கை தொடர்பான உயர்நீதிமன்ற விசாரணை நடைபெற்றது. அதில் தீர்ப்புக் கூறி, நஸீர் அகமட் பதவி இழந்து, ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அதற்கு முன்னர் முடிவுற்ற முஷாரப் தொடர்பான வழக்கு விசாரணைத் தீர்ப்பு வெளியாகவில்லை. நீதியரசர்கள் தீர்ப்பை வைத்து அடைகாத்துக் கொண்டிருக்கின்றார்களோ என்னவோ....!

இதைத் தட்டிக் கேட்க யாரும் இல்லை. நீதியரசர்களின் இத்தகைய போக்குக் குறித்து தட்டிக் கேட்கக் கூடாதா, வழக்கு போட முடியாதா என்று சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவரிடம் எரிச்சலுடன் கேட்டேன். அவர் சிரித்தார். அந்த வழக்கையும் பத்து வருடங்களாக இழுத்தடித்து வழக்குப் போட்டவரைச் சாகடித்து விடுவார்கள் என்றார் அந்தச் சட்டத்தரணி.

இலங்கையின் சட்டத்துறை எங்கு செல்கின்றது? ஆண்டவனுக்குதான் வெளிச்சம்...!

வழக்கு என்றதும் தமிழரசுக் கட்சியின் உள்வீட்டுச் சர்ச்சை விவகாரம் நினைவுக்கு வந்தது.

வழக்கு விவகாரங்கள் மேலும் இறுகும் விடயம் இன்றும் கூட நடக்கலாம்.

வழக்கை சமரசமாக தீர்க்கும் முயற்சி எடுக்கப்பட்டாலும், அது வெற்றி பெறுமா என்பதுதான் கேள்வி.

வழக்கில் வழக்காளிகள் ஒரு பக்கம். எதிராளிகள் – அதாவது கட்சி பிரமுகர்கள் – பலர். அவர்கள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு இன்னும் வரவில்லை. அப்படி அவர்களை ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டு வந்து, வழக்கை ஒற்றுமையாக அணுகும் முயற்சியும் எதிராளிகள் பக்கத்தில் – குறிப்பாகக் கட்சி நிர்வாகிகள் பக்கத்தில் – இல்லை. எதிராளிகள் பல தரப்பினராக பிரிந்திருக்கும் போது வழக்கில் இணக்கத்திற்குச் சுமூகமாக வருவதற்கான வாய்ப்புகளும் குறைவுதான்.

வழக்கின் எதிராளிகளான கட்சியும் அதன் பிரமுகர்களும், தங்களுக்குள் ஒற்றுமை பட்ட நிலைப்பாடுகளை எடுப்பதற்கான கலந்துரையாடலைக் கூட இன்னும் முன்னெடுக்கவில்லை. நாளை மறுதினம் வழக்கின் முதல் தவணை. அப்படி இருக்கையில் வழக்கில் சுமூகத் தீர்வு என்பது முயல் கொம்புதான். அங்கு வழக்காளிக்கும் எதிராளிகளுக்கும் இடையிலான வாதப் பிரதிவாதம் ஒருபுறமிருக்க, எதிராளிகள் தரப்பில் ஒற்றுமைப்பட்ட நிலைப்பாடு எடுக்கப்படாமல் பிய்ச்சல் பிடுங்கல் சந்தி சிரிக்க அரங்கேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை....!

## யாழில் விசர் நாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இளைஞர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், அவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிழந்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் விசர் நாய் கடித்தே இளைஞர் உயிரிழந்தார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது

அந்த இளைஞரைக் கடித்த விசர் நாய் வேறு யாரையும் கடித்திருக்கலாம் எனக் கருதப்படுவதால் அப்பகுதியில் அண்மையில் நாய்க்கடிக்கு உள்ளானோரும், உயிரிழந்த இளைஞருடன் பழகியவர்களும் வைத்தியசாலையை நாடுவது சிறந்தது என்று அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## தமக்கு எதிராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. அந்தப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேற்றும்போது அது தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தப் பரித்துரைகளை சபாநாயகர் சரியாக அமுல்படுத்தாமை, அரசமைப்பு, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறியமை உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாகக்கொண்டே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் சபாநாயகரிடம் வினவியபோது அவர் தெரிவித்ததாவது:–

"நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணிக்கவில்லை, அரசமைப்பை மீறவில்லை, நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறவில்லை.

பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சி என் பதவியை நான் இராஜிநாமா செய்யமாட்டேன். எவருக்கும் பயந்து ஓடவும் மாட்டேன்.

நான் நாடாளுமன்றத்தில் நடுநிலையுடன் செயற்படுகின்றேன். எனவே, எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அது நீதியின் பக்கம் நிற்கும் எம்.பிக்க–ளால் தோற்கடிக்கப்பட்டே தீரும்." – என்றார்.

## கைத்துப்பாக்கியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யுவதியின் மூத்த சகோதரன், கடந்த வருடம் இராணுவத்தில் இருந்து விலகி



வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைத்துப்பாக்கியுடன் யுவதி கைதான போது அவரிடமிருந்து 5 கைத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த யுவதி திட்டமிட்ட குற்றச் செயல்கள் வலையமைப்புடன் தொடர்புபட்டவரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பல நிகழ்வுகள்

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்காட்சி மற்றும் விமானப்படை வீரர்களின் சாகச நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அது தொடர்பான ஊடக சந்திப்பு நேற்று யாழ். கொக்குவிலில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது எயார் வைஸ் மார்சல் முதித்த மகாவத்தகே கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

“இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு ஒரு ஆற்றல்மிக்க சமூக அணிதிரட்டல் முன் முயற்சியாக ” நட்பின் சிறகுகள் ” எனும் செயற்றிட்டம் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் உள்ள 73 பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்வதுடன் “எனது புத்தகமும் வடக்கில்” எனும் தொனிப்பொருளின் கீழ் 73 ஆயிரம் புத்தகங்கள், எழுதுபொருட்கள் மற்றும் பாடசாலை உபகாரணங்கள் என்பவற்றையும் வழங்கவுள்ளோம்.

மேலும், அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசமாகிய மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் விமானப்படையின் நிதிப் பங்களிப்பில் கேட்போர்கூடம் ஒன்றும் திறந்துவைக்கப்படவுள்ளது.

வடக்கின் விவசாயத்துறையை மேம்படுத்தும் முகதாக 73 ஆயிரம் பயன்தரு மரக்கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

கல்வி, தொழிநுட்பம் சார்ந்த கண்காட்சி ஒன்றும் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிடப் பாடசாலை சீருடையுடன் வரும் மாணவர்களுக்கு இலவசமாகவும், ஏனையவர்களுக்கு 100 ரூபாவும் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படவுள்ளது. வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிடப் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்போது விமானப்படையினரின் விமான சாகசங்கள், பரசூட் சாகசங்கள் உட்படப் பல பொழுதுபோக்கு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் விமானப்படை வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர், சைக்கிளோட்டப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.” - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் விமானப்படை அதிகாரிகள், வர்த்தகத் தொழிற்துறை மன்றத் தலைவர் கே.விக்னேஸ் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# அரசமைப்பை மலினப்படுத்துகின்றார் சபாநாயகர் எனப் பீரிஸ் குற்றச்சாட்டு



“சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடுகள் அரசமைப்பையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் மலினப்படுத்தும் வகையில் உள்ளன. நிறைவேற்று அதிகாரத்தின் பிரதிநிதியாகச் செயற்படும் சபாநாயகரின் செயற்பாடுகளுக்கு இடமளித்தால் அது எதிர்காலத்துக்குத் தவறானதொரு எடுத்துக்காட்டாக அமையும்.”

- இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு முதல்கட்டமாக கைச்சாத்திட்டுள்ளோம். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்.

93 வருடகால நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அம்சங்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் சபாநாயகர் செயற்படுகிறார். இவரது முறையற்ற செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க முடியாது என்பதால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரத் தீர்மானித்தோம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பிரதிநிதியாகச் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் செயற்படுகிறார். இவர் தனது தனிப்பட்ட அரசியல் செயற்பாட்டை நாடாளுமன்றத்துக்குள் செயற்படுத்திக் கொள்ள முயற்சிப்பதால் நாட்டு மக்களின் அரசியல் உரிமை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன், நாட்டின் அரசமைப்பும் மலினப்படுத்தப்படுகிறது.

அண்மையில் சபாநாயகரால் சான்றுரைப்படுத்தப்பட்ட இணையவழி பாதுகாப்பு சட்டம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த சட்டத்தின் 57 ஏற்பாடுகளில் 34 ஏற்பாடுகளில் குறைப்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றைத் திருத்தம் செய்ய வேண்டும் என உயர்நீதிமன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது.

இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கவில்லை. தன்னிச்சையான முறையில் அரசாங்கத்தின் அவசரத்துக்கு அமைய செயற்பட்டார்.

சட்டமூலத்தை சான்றுரைப்படுத்துவதை மீள்பரிசீலனை செய்யுமாறு தேசிய மட்டத்தில் உள்ள சிவில் அமைப்புக்களும், சர்வதேச அமைப்புக்களும் வலியுறுத்தி போது அதனை கவனத்திற் கொள்ளாமல் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார். இந்தச்சட்டமூலம்தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த யோசனைகளில் ஐந்து பிரதான திருத்தங்கள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடுகளுக்கு இடமளித்துக் கொண்டிருந்தால் அது எதிர்காலத்துக்கு தவறானதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதால் தான் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர தீர்மானித்தோம்.”- என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சபாநாயகரின் குளறுபடிகள்

அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு மாறாக - உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளையும் வழிகாட்டுதல்களையும் மீறி - தம்மிஷ்டப்படி நிகழ்நிலைக் காப்புச் சட்டம் நிறைவேறியதாக சான்றளித்து, அதன் மூலம் சர்ச்சையில் சிக்கி இருக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றொரு சர்ச்சையில் நேற்று மாட்டிக்கொண்டிருக்கின்றார்.

ஏற்கனவே நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் தவறாக சான்றளித்த விடயத்துக்காக அவருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகளும் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையும் காத்திருக்கும் நிலையில் புதிய குழப்பம் ஒன்றை அவர் ஏற்படுத்தி இருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராக வரப்போகும் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை வலுப்படுத்தும் விதத்தில் இந்தச் சர்ச்சையில் சபாநாயகர் ஆற்றிய தவறான கருமங்களும் உள்ளடக்கப்படும் எனத் தெரிகின்றது.

அதேசமயம் புதிய சர்ச்சைக்காக மேலும் பல வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் சபாநாயகர் எதிர்நோக்கக்கூடிய புதிய சூழலும் உருவாகியிருப்பதாகத் தெரிகின்றது.

புதிய பொலிஸ்மா அதிபர் நியமன விவகாரத்தில் நேற்று நடைபெற்ற அரசமைப்பு கவுன்ஸிலின் முடிவில் சபாநாயகர் 'திருகுதாளம்' பண்ணியிருக்கிறார் என்று எதிர்க்கட்சிகள் வரிசையில் இருந்து கடுமையான குற்றச்சாட்டு கிளம்பி இருக்கின்றது.

அரசமைப்புக் கவுன்ஸில் தொடர்பான சட்ட விதிகளின்படி இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

ஒன்று - அரசமைப்பு கவுன்ஸிலின் தீர்மானம் மற்றும் முடிவுகள் விவகாரத்தில் குறைந்தது கவுன்ஸிலின் ஐந்து உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே அந்தத் தீர்மானம் அல்லது முடிவு செல்லுபடியாகும்.

அடுத்தது - பொதுவாக அரசமைப்புக் கவுன்ஸிலின் தீர்மானங்களில் வாக்களிக்கும் உரிமை அரசமைப்பு கவுன்ஸிலின் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கும் சபாநாயகருக்கு இல்லை. எனினும் தீர்மானங்கள் தொடர்பான வாக்களிப்பில் உறுப்பினர்களின் ஆதரவு - எதிர்ப்பு எண்ணிக்கை சரிசமமாக அமைந்தால், அந்தத் தீர்மானத்தை ஒட்டி இறுதி முடிவு செய்வதற்காக சபாநாயகர் கடைசியில் ஒரு பக்கத்திற்கு வாக்குச் செலுத்தித் தீர்மானத்தை முடிவுறுத்தலாம்.

இந்த இரண்டு அடிப்படை விடயங்களையும் குழப்பி அடித்தே தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மாஅதிபராக நியமிக்கும் விடயம் கவுன்ஸிலினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சபாநாயகர் அறிவித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸிலில் பிரதமர் உட்பட நான்கு பேர் மட்டுமே ஆதரித்துள்ளனர். அது கவுன்ஸிலில் முடிவு அல்லது தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான ஐந்து உறுப்பினர்களின் ஆதரவு என்ற நிலையை எட்டவில்லை.

ஜனாதிபதியின் பரிந்துரையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவரது கட்சியைச் சேர்ந்த கபீர் காசிம் ஆகியோர் எதிர்த்துள்ளனர்.

மற்றைய இரண்டு பேர் வாக்களிப்பில் பங்கு பற்றாமல் நடுநிலை வகித்தனர்.

ஜனாதிபதியின் பரிந்துரையை எதிர்த்து வாக்களித்த இருவரையும் மற்றும் வாக்களிப்பில் பங்கு பற்றாமல் நடுநிலை வகித்த இருவரையும் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு எதிரான நிலைப்பாட்டை பிரதிபலித்துள்ளனர் என்று வியாக்கியானம் கூறி, ஆகவே ஆதரவு நான்கு பேர் - எதிர்ப்பு 4 பேர் என்று அர்த்தப்படுத்தி, இதனால் வாக்களிப்பு சரிசமனாக வந்துள்ளது, ஆகவே ஐந்தாவது வாக்காக என் வாக்கை அளித்து தீர்மானம் நிறைவேறியதாக அறிவிக்கிறேன் என்று முடிவு எடுத்து, பிரகடனப்படுத்தியிருக்கின்றார் சபாநாயகர்.

உண்மையில் ஜனாதிபதியின் பரிந்துரைக்கு நாலு - இரண்டு என்ற அளவு அளவில் வாக்குகள் கிட்டியமையால் போதிய ஆதரவு கிடைக்கவில்லை எனத் தெரிவித்து பரிந்துரையை சபாநாயகர் திருப்பி ஜனாதிபதிக்கு அனுப்பி இருக்க வேண்டும்.

ஆனால் வாக்களிப்பை 4 - 4 ஆக அத்தப்படுத்தி, அதனால் தனது வாக்கை அளிக்கும் அதிகாரம் தமக்கு வந்துள்ளதாகத் தெரிவித்து, தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் ஜனாதிபதியின் பரிந்துரைக்குத் தாமும் ஒரு வாக்கைச் செலுத்தி, அதன் மூலம் போதிய வாக்குகளுடன் ஜனாதிபதியின் பரிந்துரையை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்து இருப்பதாக அறிவித்திருக்கின்றார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.

முன்னர் ஜனாதிபதியாக இருந்தபோது உயர்நீதிமன்றத்திடம் நல்ல குட்டு வாங்கிய மைத்திரிபால சிறிசேன போல சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவும் வாங்கத் தயாராகிறார் என்றே தோன்றுகின்றது.

# கடலில் வீசிய தங்கத்தை தேடும் பணி தோல்வி ஐந்து நாள்களுக்குப் பின்னர் கைவிடப்பட்டது







இலங்கையில் இருந்து தமிழகத்தின் வேதாளை கடற்கரை பகுதிக்கு கடத்திவரப்பட்டு கடலில் வீசப்பட்ட தங்க கட்டிகளை கடந்த 5 நாள் களாக தொடர்ந்து மத்திய வருவாய் புல னாய்வு துறை மற்றும் இந்திய கடலோர காவல் படையினர் கடலுக்கு அடியில் தேடி வந்தனர்.

இந்த நிலையில் தங்க கட்டிகள் கிடைக்காததால் தேடும் பணி தோல்வியில் முடிந்தது.

இராமநாதபுரம் மாவட்டம் வேதாளை சிங்கி வளைகுச்சி கடற்கரைக்கு இலங்கையில் இருந்து நாட்டுப்படகு மூலம் தங்க கட்டிகள் கடத்தி வருவதாக தூத்துக்குடி மத்திய வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத் துள்ளது.

இதன் அடிப்படையில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை மத்திய வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகள் மண்டபம் இந்திய கடலோர காவல் படை வீரர்களுடன் இணைந்து வேதாளை கடலில் ரோந்து படகில் மறைந்திருந்தனர்.

அப்போது இலங்கையில் இருந்து தங்கக்கட்டிகளை கடத்தி வந்ததாக சொல்லப்படும் நாட்டுப்படகு வேதாளை நோக்கி வந்து கொண்டிருந்துள்ளது. அப்போது கடலில் மறைந்திருந்த மத்திய வருவாய் புலனாய்வு துறையினர் நாட்டு படகை மடக்கி பிடிக்க முயன்ற போது நாட்டு படகில் இருந்த மூவரில் ஒருவர் கடலில் குதித்து தப்பினர்.

மேலும் படகில் இருந்த இருவரை படகுடன் மடக்கி பிடித்த அதிகாரிகள் அவர்களை மண்டபம் கடலோர காவல் படை முகாமுக்கு அழைத்துச் சென்று தீவிர விசாரணை நடத்தினர். இதன்போது, நாட்டுப்படகு வேதாளையை சேர்ந்தது என்பதும் படகில் இருந்த இருவரும் அதே பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்தது.

அத்துடன், அவர்கள் இலங்கையில் இருந்து சுமார் 10 கிலோ தங்கத்தை கடத்தி வந்த போது அதிகாரிகள் மடக்கிப் பிடித்ததால் தங்க கட்டிகள் அடங்கிய பார்சலை கடலில் வீசியதையும் ஒப்புக் கொண்டனர்.

இதனையடுத்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களாக தொடர்ந்து ஸ்கூபா வீரர்கள் மற்றும் தூத்துக்குடி சேர்ந்த மீனவர்களை கொண்டு தொடர்ந்து தங்கத்தை கடலுக்கு அடியில் தீவிரமாக தேடி வந்தனர்.

தங்கம் கிடைக்காததால் கேரளாவில் இருந்து வரவழைக்கப் பட்ட கடலுக்கு அடியில் கிடக்கும் பொருள்களை ஸ்கேன் செய்யும் அதிநவீன கருவிகளை பயன்படுத்தி, மீனவர்களின் உதவியுடன் சிங்கி வலை குச்சி மற்றும் சூடை வலைக்குச்சி கடல் பகுதிகளில் தொடர்ந்து தேடினர்.

இருப்பினும் தங்கம் குறித்து எந்தவிதமான தகவல் கிடைக்காததால் தேடும் பணியை மத்திய வருவாய் புல னாய்வு துறை அதிகாரிகள் ஐந்து நாள்களுக்குப் பின்பு நேற்று மாலை கைவிட்டனர்.

இதேவேளை, வேதாளை மரைக்காயர்பட்டிணம் மண்டபம் உள்ளிட்ட பகுதிகளில் மத்திய வருவாய் துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

நாட்டுப்படகு மீனவர்கள் சட்டவிரோத கடத்தல் சம்பவங் களில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மத் திய வருவாய் புலனாய்வு துறை அதிகாரிகள் எச்சரித்துள்ள னர்.

# கருணாநிதியின் நினைவிடம் திறப்பு; தலைவர்கள், பிரபலங்கள் பங்கேற்பு





சென்னை மெரினா கடற்கரையில் புதுப்பிக்கப்பட்ட அண்ணா நினைவிடம் மற்றும் கருணாநிதியின் நினைவி டம் ஆகியவற்றை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

அண்ணா மற்றும் கருணாநிதியின் நினைவிடங்களில் மலர்வளையம் வைத்து முதல்வர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், தி.மு.க. தலைவர்கள், கூட்டணிக் கட்சியினர், நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, மெரினா கடற்கரையில், தமிழக முன்னாள் முதல்வர்களான அண்ணா வின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், புதிதாக அமைக்கப் பட்டுள்ள கருணாநிதியின் நினைவிடத்தையும் திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து முதல்வர், அண்ணா மற்றும் கருணாநிதியின் திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து, அவர்களது நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தி னார்.





# ரபா நகரை நோக்கி முன்னேறவுள்ள இஸ்ரேல் இராணுவத்தின் தரைப்படை

ரபா நகரை நோக்கி இஸ்ரேல் இராணுவத்தின் தரைப் படை முன்னேற திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

இதனால், காசா பகுதியில் போர் நடக்கும் பகுதிகளி லிருந்து மக்களை வெளியேற்றும் திட்டம் மற்றும் அடுத்தகட்ட இராணுவ செயல்பாட்டு திட்டத்தை இராணுவம் நடைமுறைப் படுத்த உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தகவல்களை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக, அங்கிருந்து மக்களை வெளியேற்றுவதற்கான திட்டத்தை இஸ்ரேல் இராணுவம் முன்மொழிந்துள்ளது.

ஆனால், பொதுமக்கள் எப்படி எந்த பகுதிக்கு மாற்றப் படுவார்கள் என்பது குறித்த எந்த விவரமும் அந்த அறிக் கையில் இல்லை.

ரபா நகரில் தற்போது சுமார் 14 லட்சம் பலஸ்தீனர் கள் உள்ளனர். இந்த நகரை இஸ்ரேல் தரைப்படை சுற்றி வளைத்து தாக்கினால் ஏராளமான மக்கள் கொல்லப் படுவார்கள் என வெளிநாடுகள் மற்றும் மனிதநேய உதவி அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

# புர்கினா பாசோ நாட்டில் தேவாலயத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 15 பேர் பலி







புர்கினா பாசோ நாட்டில் தேவாலயம் ஒன்றில் சிறப்புப் பிரார்த்தனைக்காகப் பொதுமக்கள் ஒன்று கூடிய நிலையில், பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் உள்ள நாடு புர்கினா பாசோ, கடந்த பல ஆண்டுகளாகவே இந்த நாட்டில் உள்ளூர் மோதல் தொடர்ந்து நடந்து வருகிறது.

வடக்கு புர்கினா பாசோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் நேரப்படி காலை நடந்த பிரார்த்தனையின் போது திடீரென துப்பாக்கி ஏந்திய ஒரு கும்பல் தேவாலயத்திற் குள் நுழைந்து அங்கு பிரார்த்தனை செய்து கொண்டிருந்த வர்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டது.

இந்த பயங்கரவாத தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என தேவாலயத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உள்ளூர் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரார்த்தனைக்காகக் கூடியிருந்த எஸ்ஸ கனே கிராமத்தில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்தி லேயே இந்த பயங்கரவாதத் தாக்குதல் நடந்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே புர்கினா பாசோவில் அமைதி திரும்ப வேண்டும் என உள்ளூர் நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ள நிலையில், சிலர் திட்டமிட்டு தங்கள் பகுதியை நாசம் செய்ய இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக கண்டனம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் செயல்படும் ஜிஹாதிக் பயங்கரவாதிகள் இதுபோன்ற தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வரும் நிலை யில், தேவாலயத்தின் மீதான இந்தத் தாக்குதலை அந்த பயங்கரவாத குழு நடத்தி இருக்கலாம் என்று கூறப்படுவ தாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தென்னிந்தியக் கும்மாள நடிகைகளின் வருகை சமூகத்தைப் போதை மயப்படுத்தும் எத்தனமே!

## பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



தமிழ்ப் பிரதேசங்களில் தினம் தினம் போதை மரணங்கள் பதிவாகும் அளவுக்கு எமது இளைய தலைமுறை இன்று போதைப்பொருளுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட கையோடு இளைஞர்களை இலட்சியப் பாதைகளில் இருந்து திசை திருப்பும் நோக்கில் போதைப் பொருள்கள் திட்டமிட்டு விநியோகிக்கப்பட்டன. இன்று அதைக் கைவிட முடியாத அளவுக்கு போதை பெரும் புற்று நோயாகத் தமிழ்ச் சமூகத்தை அரிக்க ஆரம்பித்து விட்டது. இது போதாது என்று , இப்போது திட்டமிட்டுத் தென்னிந்தியாவில் இருந்து கும்மாள நடிகைகள் வரவழைக்கப்படுகின்றனர். இதுவும் தமிழ்ச் சமூகத்தைப் போதை மயப்படுத்தும் இன்னுமொரு நிகழ்ச்சி நிரலே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை மல்லாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

எமது மக்களின் பொழுது போக்குக்காக என்று சொல்லி இந்தியாவில் இருந்து கும்மாள நடிகைகள் கூட்டி வரப்படுகின்றனர். ரம்பா, ஊர்வசி, மேனகாக்களைக் கொண்டு முனிவர்களின் தவத்தைக் கலைத்த கதைகள் புராணங்களில் நிறைய உண்டு. இந்தக் கதைகள்தாம் இப்போது எம் கண் முன்னே அரங்கேறத் தொடங்கி உள்ளன. கஞ்சாவும், மாவாவும், ஐஸும், ஹெரோயினும் மாத்திரம் போதைப் பொருள்கள் அல்ல. மதியை மயக்கும் எல்லாமே போதைகள்தாம் . அந்த வகையிலேயே, எமது இளைஞர்களைக் குறி வைத்து கும்மாள நடிகைகளின் களியாட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப் படுகின்றன. இவை தொடர்ந்து நிகழுவதைத் தவிர்க்கும் முயற்சிகளில் தமிழ்ச் சமூகத்தின் நலனில் அக்கறையுள்ள அனைவரும் ஈடுபட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பொழுது போக்குகள் அவசியம். ஆனால், அந்தப் பொழுதுபோக்குகள் பண்பாட்டுச் சீரழிவுக்கு வித்திடுவனவையாக இருக்கக் கூடாது. பண்பாடு என்பது ஓர் இனத்துக்குத் தனித்துவமான, அந்த இனம் தன்னை யார் என்று உணர்ந்து கொள்ளவும், மற்றவர்களுக்குத் தன்னை யார் என்று அடையாளப்படுத்தவும் கூடிய ஒரு வாழ்க்கை முறை. இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கின்ற நாம் எமது இனத்தின் பண்பாட்டு அடையாளங்களை எந்தக் கேளிக்கைகளின் பொருட்டும் இழந்து விடக் கூடாது. நாமும் நமக்கென்று பல கலைகளைக் கொண்டிருக்கிறோம். அவற்றை மேடையேற்ற உணர்வுள்ள– பணம் படைத்தவர்கள் – முன்வரவேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.

# ‘உறுமய’ காணி உரிமையைப் பெறுவதற்காக பதிவு செய்ய அவசரத் தொலைபேசி இலக்கம்




‘உறுமய’ தேசிய வேலைத் திட்டத்தின் அபிலாஷைகளை நனவாக்கி, மக்கள் தமது காணியின் முழுமையான உரிமையை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்கும் நோக்கில் அதற்காக விண்ணப்பிப்பதற்கு அவசரத் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது.

தினமும் காலை 8.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஜனாதிபதி அலுவலகம், உறுமய தேசிய செயற்பாட்டு அலுவலகம், 1908 என்ற அவசரத் தொலைபேசி இலக்கம் மற்றும் 0114 354600/0114 354601 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தமது கோரிக்கைகளைப் பதிவு செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

www.tinyurl.com/urumaya (டிஜிட்டல் விண்ணப்ப படிவம்) படிவத்தைப் பூர்த்தி செய்யும் இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நில மேம்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு நிபந்தனைகளுடன் கூடிய அனுமதிப் பத்திரங்கள் / கொடுப்பனவுப் பத்திரங்கள் உள்ள அரசாங்கக் காணிகளை நிபந்தனைகளின்றி முழுமையான உரிமையை மக்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஒரு தனித்துவமான முன்மொழிவாகும் இது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ‘உறுமய’ நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக முழுமையான உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களைப் பெறுவதன் மூலம், காணிக்கு புதிய பெறுமதி கிடைப்பதுடன், அவர்களின் உரிமையைப் பாதுகாத்து அவர்களின் குடும்பத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வாய்ப்பு உருவாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# இராசபுரம் குடியேற்ற மாணவர்களினுடைய போக்குவரத்துக்காக தனி பஸ் அன்பளிப்பு

## புலம்பெயர் தமிழர் அமைப்பால் வழங்கி வைப்பு

**(கே.வசந்தன்)**

வவுனியா வடக்கு, சின்னடம்பன், இராசபுரம் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மாணவர்களின் பயணத்திற்காக தனியான பஸ் ஒன்று புலம்பெயர் தமிழர் அமைப்பால் நேற்று வழங்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல்வேறு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பூந்தோட்டம் முகாமில் தங்கியிருந்த நிலையில் புலம்பெயர் தமிழ் வர்த்தகரான அல்லிராஜா சுபாஸ்கரனின் லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக 150 குடும்பங்களுக்கு வவுனியா வடக்கு, சின்னடம்பன், இராசபுரம் பகுதியில் காணியுடன் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு அவர்கள் குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இங்குள்ள 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்திற்கு பல்வேறு சிரமங்களுடன் சீரற்ற வீதியால் காட்டுப் பாதையூடாக நடையாகவும், துவிச்சக்கர வண்டியிலும் சென்று கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் அந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக லைக்கா ஞானம் அறக்கட்டளை ஊடாக பஸ் ஒன்று வழங்கப்பட்டதுடன், அதற்கான சாரதியும் நியமிக்கப்பட்டுள்ளார். அந்த பஸ் அக்கிராமத்தில் இருந்து தினமும் பாடசாலை சேவையில் ஈடுபடவுள்ளது.

நேற்றைய இகழ்வின் போது, கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கைக்காக சர்வதேச ரீதியில் பளுதூக்கல் போட்டியில் பங்கு பற்றி வரும் யாழ் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த ச.புசாந்தநுக்கு அவரது வெற்றி வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக 21 லட்சம் ரூபா பணமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் அரசாங்க அதிபரும், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் இலங்கைக்கான துணைத் தலைவர் சுந்தரம் அருமைநாயகம், இலங்கையின் பளுதூக்கல் வீரர் ச.புசாந்தன், வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர், லைக்கா ஞானம் அறக்கட்டளையின் பிரமுகர்கள், கிராம ஆர்வலர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



















# மலையகத் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளை நாளாந்தச் சம்பளத்துடன் மட்டுப்படுத்தக் கூடாது!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு




"மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நாளாந்த சம்பளத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக் கூடாது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு வீடு, காணி, கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என ஒவ்வொரு பகுதியிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்."

– இவ்வாறு நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயற்பாடுகளைப் பொறுத்தவரை, கடந்த 19 ஆம் திகதி 1,300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டத்தில் எவ்வித தாமதமும் இருக்கக் கூடாது என்ற வகையிலேயே ஒரே நேரத்தில் இதனை ஆரம்பித்தோம். எஞ்சியிருக்கின்ற 8,700 வீடுகளையும் இவ்வாறே ஒரே நேரத்தில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். ஏனென்றால் நாம் ஒரு முறைமையின் அடிப்படையில் செயற்பட விரும்புகின்றோம். இந்த 1,300 வீட்டுத்திட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பூர்த்தி செய்யப்படும்.

இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் அரசியல் ரீதியாக தெரிவுசெய்யப்படுவதாக சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதில் எந்த உண்மையும் கிடையாது. முக்கியமாக இந்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் குறித்த ஓர் அளவுகோளில் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவர். உதாரணமாக இரண்டு, மூன்று குடும்பங்கள் ஒரு லயத்தில் இருப்பார்கள். அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதுவரை எந்தவொரு அரசாங்க வீட்டுத் திட்டத்தின் ஊடாகவும் பயன் பெறாதவர்களும் தற்காலிக குடியிருப்புகளில் இருப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

அத்துடன் 7 பேர்ச்சஸ் காணி வழங்கப்படுவதாக சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் மலையக மக்களுக்கு 10 பேச்சர்ஸ் காணி வழங்கப்படுகிறது. அவ்வாறு யாருக்காவது 7 பேர்ச்சஸ் காணி மட்டும் வழங்கப்படுமாயின் அது குறித்து முறையிட்டால் அவர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்க நடவடிக்கை எடுப்போம். சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிப்பதற்காகவே பாரத் – லங்கா வீட்டுத் திட்டத்தின் மூலம் 10 பேர்ச்சஸ் காணி வழங்கும்திட்டம்அமுல்படுத்தப்படுகிறது. 'பிரஜா சக்தி' வேலைத்திட்டத்தின் ஊடாக இந்த சுயதொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இந்த வருடத்தின் நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக 'கந்துரட்ட தசக' என்ற வேலைத் திட்டத்தின் மூலம் 89 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தலா 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே நிர்மாணிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள வீடுகளுக்கு இதில் ஒரு தொகை நிதி வழங்கப்படும். மேலும் மலையக மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

காணி வழங்கப்படும் போது அந்தக் காணி உறுதிப்பத்திரத்தை பெருந்தோட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்குமாறு பெருந்தோட்டக் கொம்பனிகள் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தன. அதனை நாம் மறுத்திருக்கிறோம். காரணம், நிபந்தனையற்ற முறையில் இந்தக் காணி உறுதிப் பத்திரங்கள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். பெருந்தோட்டக் கொம்பனிகளின் கோரிக்கையை பிரதமர் அலுவலகமும் மறுத்துள்ளது. இதனைத்தவிர, தற்போது பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோலைத் தயாரிப்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த காணி உரிமை வழங்குவது தொடர்பான திட்டத்தினை எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னர் அமுல்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கிறோம். இதற்காக ஜனாதிபதி 4,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளார்.

அத்துடன், தோட்டத்தில் வேலை செய்தால் மட்டுமே வீடு வழங்கப்படும் என்ற நிபந்தனை இதுவரை இருந்தது. ஆனால் , இலங்கை அரசாங்கத்தின் ஆலோசனையும் சேர்த்து, இந்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் தோட்டத்தில் பிறந்தால் வீடு என்ற வேலைத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளோம்.

இதற்கமைய தோட்டத்தில் பிறந்து, வளர்ந்து, படித்து, தோட்டத்தில் இருந்து ஆசிரியர் தொழில் செய்யும் ஒருவருக்கும் இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைக்கும். அதேபோல், கலைஞர்களுக்கும் வீடு கிடைக்கும். அத்துடன், 2015ஆம் ஆண்டு இந்திய வீட்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கி, அளவுகோளின் அடிப்படையில் வீடுகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம். ஆனால் இந்தப் பணிகள் அரசியல்மயப்படுத்தப்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரு சில அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கூட கைச்சாத்திட்டுள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தேவையில்லை.

சில அரசியல் தலைவர்களின் கூற்றுப்படி, தோட்டங்களில் உள்ள தமிழ் மக்கள் எதிர்நோக்கும் ஒரே பிரச்சினை 1500 ரூபா நாளாந்த சம்பளம் பெற்றுக்கொள்வதாகும். எனது மக்களை அந்தளவு தாழ்த்த நான் விரும்பவில்லை. அரசாங்கம் அல்லது எதிர்க்கட்சி அல்லது எந்தக் குழுவின் அரசியல் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் சிறுபான்மைப் பிரிவினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசியல் பிளவுகள் இருக்கக் கூடாது என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.

அதுவே எனது நிலைப்பாடுமாகும். அந்த சமூகத்தின் வளர்ச்சிக்காக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இணைந்து செயற்பட முன்வருமாறு பல தடவைகள் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்த போதிலும் துரதிஷ்டவசமாக பலர் அரசியல் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்" – என்றார்.

# மொட்டில் போட்டியிடுவதா என்பதை முதலில் ரணில் முடிவு செய்ய வேண்டும்

## மஹிந்த கூறுகின்றார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் உறுப்பினரல்லர். எமது கட்சியில் போட்டியிடுவதா, இல்லையா என்பதை அவர் முதலில் தீர்மானிக்க வேண்டும். பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அரசியல் கூட்டணி தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம் என முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் கட்சியின் உறுப்பினர்களுடன் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி :- முக்கிய விடயங்கள் ஏதும் இன்று பேசப்பட்டனவா?

பதில் :- எந்நாளும் விசேட பேச்சுவார்த் தைகள் தான்

கேள்வி :- பேச்சுவார்த்தையில் எவ்விட யங்கள் பற்றி பேசினீர்கள்?

பதில் :- அரசியல் தரப்பினர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களை எதிர்க்கொள்வது உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி பேசினோம். கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ இன்னும் இருவாரங்களில் நாட்டுக்கு வருகைத் தருவார். அதன் பின்னர் அரசியல் கூட்டணி பற்றிக் கலந்துரையாடுவோம்.

கேள்வி :- ரணில் விக்கிரமசிங்க, நாமல் ராஜபக்ஷ , பஸில் ராஜபக்ஷ ஆகியோரில் யார் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ?

பதில் :- யாரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்பதை கட்சியின் நிறைவேற்று சபையே தீர்மானிக்கும். ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் உறுப்பினரல்லர், எமது கட்சியில் போட்டியிடுவதா, இல்லையா என்பதை அவர் முதலில் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி :- உங்களை போன்று நாமல் ராஜபக்ஷவும் தற்போது விகாரைகளுக்குச் செல்கிறார் ?

பதில் :- தந்தை சென்ற பாதையில் தான் மகனும் செல்ல வேண்டும். அவர் பௌத்தர். ஆகவே விகாரைகளுக்கு செல்கிறார்.

கேள்வி :- சபாநாயகருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ளனர்?

பதில் :- சபாநாயகரை நாங்கள் பாதுகாப்போம். நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிச்சயம் தோற்கடிப்போம். – என்றார்.



# அட்டாளைச்சேனை பிரதேச உள்ளூர் உற்பத்திச் சந்தை

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவால் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஒவ் வொரு மாதமும் ஏற்பாடு செய்யப்படும் உள்ளூர் உற்பத்திச் சந்தை நேற்று (26) பிரதேச செயலக வளாகத்தில், பிரதேச செயலாளர் பி.ரி. எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் மற்றும் ஏனைய சமுர்த்தி முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வை எம் எம் சித்தி நஸீறா, எம் ஐ எல். பாத்திமா வீவி ஆகியோர் நெறிப்படுத்தினர்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.02.2024




இன்றைய செயல்கள் சமூகமாக நடக்கும். நீங்கள் உற்சாகமான மன நிலையில் காணப்படுவீர்கள். வீட்டுக்கு விருந்தினர்கள் வருகை காணப்படும். அவர்களுடன் சேர்ந்து மகிழும் வாய்ப்பு கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் இன்று பணியில் வளர்ச்சி காண்பீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இன்று நல்ல மன நிலையில் காணப்படுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. பாதுகாப்பான பொருளாதார நிலை காணப்படும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள். இன்று நீங்கள் ஆரோக்கியமாகக் காணப்படுவீர்கள்.




இன்று உங்களுக்கு பொறுமை அவசியம். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்கள் பணியில் திருப்தி குறைந்து காணப்படும். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நீங்கள் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்களின் ஆழமான உறவை தக்க வைத்துக்கொள்ள உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை சாதகமாக காணப்படாது. உங்களால் முடிந்த அளவுக்குப் பிறருக்குப் பண உதவி செய்வதன் மூலம் இன்றைய நாளை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.




இன்று சிறப்பான நாளாக அமையாது. சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் உங்கள் உணர்சிகளில் கட்டுப்பாடு இன்றி இருப்பீர்கள். பொறுமை அவசியம். உங்கள் மனதில் இருக்கும் குழப்பங்களை விலக்க வேண்டும்.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை திறமையாக கையாள்வது கடினமாக இருக்கும்.

உங்களின் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று குறைந்த அளவு பணமே சம்பாதிக்க முடியும் . பணத்தை சேமிப்பதும் கடினமாகத் தெரியும். அதிர்ஷ்டம் உங்களுக்குச் சாதகமாக இருக்காது. வயிற்று வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




இன்று உங்கள் கொள்கைகளில் வெற்றி பெறுவதற்கு சாதகமான நாள். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணரும் நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் செயல்திறன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும் நாள். நீங்கள் தொடர்ந்து முயன்று உங்கள் திறமைகளை நிரூபிக்கக் கடுமையாகப் போராட வேண்டும்.

இன்று உணர்ச்சி வசப்பட்டுக் காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைப் பாதிக்கும்.

இன்று பண வரவு சிறப்பாக காணப்படும். பணத்தை சிறப்பாக பயன்படுத்துவீர்கள். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதற்குப் பணத்தைப் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. உங்கள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கூடுதல் கவனம் தேவை. பிறருடன் பேசும் போது யோசித்துக் கவனமாகப் பேச வேண்டும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் கிடைக்கும்.

சகபணியாளர்களை சமாளிப்பதைக் கடினமாக உணர்வீர்கள். நீங்கள் பொறுமையாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். எதிர்மறை உணர்ச்சிகளை உங்கள் துணையிடம் காட்டாமல் இருப்பது சிறந்தது.

பண வரவு போதிய அளவிற்கு இருக்காது. உங்கள் பிரியமான ஒருவரின் உடல் நலத்திற்காக திடீர் செலவு ஏற்பட வாய்ப்புள்ளது.

கண் எரிச்சல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுமையாக இருக்க வேண்டும். யதார்த்தமாக இருக்க வேண்டும். உங்கள் உடன்பிறந்தவர்களால் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். இதனால் உங்களுக்கு வருத்தம் உண்டாகும். அவர்களை தவிர்த்தல் நல்லது. பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. கடினமாக உழைத்தாலும் உங்கள் பணிக்கு அங்கீகாரமும் நற்பெயரும் கிடைக்காது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியாக இருக்க வேண்டும், சில சமயங்களில் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும் உங்கள் பொறுப்புகள் அதிகரிக்கும் காரணத்தால் நீங்கள் அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




இன்றைய நாள் உங்கள் இலக்குகளை அடைவதற்கு உங்களுக்கு சாதகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.எதிர்மறை எண்ணங்களை விலக்க நீங்கள் சமயோஜித புத்தியை பயன்படுத்த வேண்டும்.

அதிக வேலை காரணமாக நீங்கள் சோர்ந்து போவீர்கள். உங்கள் பணிகளை திறமையாக திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டும். நல்ல வளர்ச்சிக்கு இது வழிகாட்டும்.

நீங்கள் உங்கள் துணையிடத்தில் உணர்சிவசப்படுவீர்கள். உறவின் நல்லிணக்கத்தை இது பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பணத்தை சிக்கனமாகக் கையாள வேண்டும். சேமிக்கும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் நற்பெயரைப் பெறுவீர்கள்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிக்காட்டுவீர்கள். உங்கள் பணிக்கான நன்மதிப்பும் நற்பெயரும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும். நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. நீங்கள் துடிப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.02.2024




இன்று சிறப்பான நாள். சிறிய முயற்சியில் உங்கள் இலக்குகளை அடைவீர்கள். புதிய முதலீடு லாபகரமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும்.

பணியிடத்தில் சமூகமான நிலை காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாகச் செய்வீர்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரைவாக செய்து முடிப்பீர்கள்.

நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வதன் காரணமாக இன்று நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள்.பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்தின் வளர்ச்சிக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் நிறைந்த மனநிலை காரணமாக இன்று நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் வளர்ச்சி பாதிக்கப்படும். உங்கள் நலத்தை மேம்படுத்த இது உகந்ததல்ல.

பணியிடத்தில் சிறப்பான பலன்கள் காணப்படாது. அதிகப் பணிகள் காரணமாக உங்கள் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நட்பு முறையுடன் அணுகுவதன் மூலம் உறவில் சுமூகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை பூர்த்தி செய்ய போதிய அளவு பணம் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படாது. இன்று உங்களை உற்சாகமாக வைத்துக் கொண்டு மற்றவரையும் மகிழ்விக்க வேண்டும். எது வந்த போதிலும் சமநிலையோடு ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக அமையப் பிரார்த்தனை மேற் கொள்ளுங்கள்.

பணிச்சுமை காரணமாக பணியில் சில அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளால் சில பிரச்சினைகளை எதிர் கொள்வீர்கள். பணிகள் இறுக்கமாக காணப்படும். நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று நன்மையான பலன்கள் நடக்கும். உங்கள் கடின உழைப்புக்கான பலன்களைப் பெறுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நல்ல பலனை பெற்றுத் தரும்.

பணிகள் திருப்தியை அளிக்கும். உங்களிடம் காணப்படும் புத்திசாலித்தனம் மற்றும் செயல்திறன் காரணமாக வெற்றிகரமான பலன்கள் கண்டு பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறலாம். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வைப் பராமரிப்பீர்கள்.

இன்று சாதகமான நிதிநிலைமை காணப்படும். உங்கள் பணத் தேவைகளை எந்தவிதமான இடையூறுமின்றி நிறைவேற்றுவீர்கள். இன்று அதிர்ஷ்டமான நாள்.









# நேற்றுடன் நிறைவடைந்தது தேசிய சாரணர் ஜம்போறி!

(எம். எப். றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் 10 ஆவது தேசிய சாரணர் ஜம்போரி நேற்று திங்கட்கிழமையுடன் நிறைவடைந்தது.

திருகோணமலையில் கடந்த 20 ஆம் திகதி இந்த ஜம்போரி ஆரம்பமாகியது.

பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரீத் பெனாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்தச் சாரணர் தேசிய ஜம்போரியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை அரம்பித்து வைத்தார்.

தொடர்ச்சியாக ஏழு நாள்கள் நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போரியில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிய மற்றும் சர்வதேச நாடுகளில் இருந்து ஆயிரக் கணக்கான சாரணர்களும் சாரணியத் தலைவர்களும் பங்குபற்றினர்.

இலங்கையின் பல மாவட்டங்களில் இருந்தும் சாரணர்கள், பெண் சாரணர்கள், திரி சாரணர்கள், குருளைச் சாரணர்கள், கடல் சாரணர்கள் என



எல்லா வகையான சாரணர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

முதலாவது தேசிய சாரணர் ஜம்போரி 1952 ஆம் ஆண்டு கொழும்பிலும் இரண்டாவது தேசிய சாரணர் ஜம்போரி 1962 ஆம் ஆண்டு கொழும்பிலும் நடைபெற்றன. மூன்றாவது தேசிய சாரணர் ஜம்போரி அனுராதபுரத்தில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்றது.

நான்காவது தேசிய சாரணர் ஜம்போரி குருநாகலில் 1992 ஆம் ஆண்டும் ஐந்தாவது தேசிய சாரணர் ஜம்போரி 1998 ஆம் ஆண்டு கண்டியிலும் ஆறாவது தேசிய சாரணர் ஜம்போரி 2022 ஆம் ஆண்டு பலப்பிட்டிலும் நடைபெற்றன.

அத்துடன் ஏழாவது தேசிய சாரணர் ஜம்போரி நுவரலியாவில் 2006 ஆம் ஆண்டும், எட்டாவது தேசிய சாரணர் ஜம்போரி 2010 ஆம் ஆண்டு அம்மாந்தோட்டை அங்குன கொலபெலஸவிலும் ஒன்பதாவது தேசிய சாரணர் ஜம்போரி 2016 ஆம் ஆண்டு வடமாகாணத்தின் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன.

